# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் 15.07.2026**

**முன்னிலை**

## முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப (ஓய்வு)
## மாநில தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். SA 11132/SCIC/2024**

திரு K. தர்மலிங்கம் மேல்முறையீட்டாளர்

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட ஆட்சியரின் கூடுதல், ....... பொதுஅதிகார அமைப்பு
நேர்முக உதவியாளர் (நிலம்),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
காஞ்சிபுரம் 631 501

**ஆணை**

| | | |
|---|---|---|
| 1. | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 23.03.2024 |
| 2. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 16.05.2024 |
| 3. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 19.08.2024 |
| 4. | அதன்பின்பு பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 29.09.2025 |

மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் / மாவட்டஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், காஞ்சிபுரம் என்ற முகவரிக்கு சட்டப்பிரிவு 6(1)-ன் கீழ் 23.03.2024 தேதியிட்டு அனுப்பிய மனுவில் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியருக்கு பதிவுத்தபால் மூலம் 23.02.2024 தேதியிட்டு அனுப்பிய மனுவின் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்து 8 இனங்களில் தகவல்களை வழங்குமாறு கோரியுள்ளார்.

2. மனுதாரர் 75 வயதான மூத்த குடிமகனாவர், அவர் தனது உதவியாளர் திரு M.P. பிரசாந்த் என்பவருடன் இன்றைய விசாரணைக்கு ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் திருமதி ர. விஜயலட்சுமி, பொதுத் தகவல் அலுவலர் / கூடுதல் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், காஞ்சிபுரம் ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

3. மனுதாரரின் மனுவானது ஆக்கிரமிப்பு அகற்றுவது தொடர்புடையது என்றும், அதுகுறித்து 23.02.2024 தேதியிட்டு தான் மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பிய மனுவின் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விவரத்தினை கோரியதாகவும், அதன் விவரம் பொதுத் தகவல் அலுவலரால் தனக்கு வழங்கப்படவில்லையென்றும் மனுதாரர் தெரிவித்தார். அதற்கு பொதுத் தகவல் அலுவலர் மனுதாரருக்கு 29.09.2025 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், அதில் மனுதாரரின் ஆக்கிரமிப்பு அகற்றுவது தொடர்பான மனுவானது குன்றத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலருக்கு அனுப்பப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் எடுத்துரைத்தார். மேலும் ஆக்கிரமிப்பு அகற்றுவது குறித்த Form 1 & 2 ஆனது குன்றத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலருக்கு பொதுத் தகவல் அலுவலரால் அனுப்பப்பட்டுள்ளதாகவும், ஆனால் நாளது தேதிவரையில் மேற்படி ஆக்கிரமிப்பானது அகற்றப்படவில்லையென்றும் பொதுத் தகவல் அலுவலர் விசாரணையின்போது தெரிவித்தார். மேலும் ஆக்கிரமிப்பு அகற்றுவது குறித்த நடவடிக்கையானது வட்டார வளர்ச்சி அலுவலரால் மேற்கொள்ளப்படவேண்டிய பணியென்றும் தெரிவித்தார். ஆவணங்களை பரிசீலனை செய்கையில், இந்நிகழ்வில் மனுதாரரின் மனுவானது சட்டப்பிரிவு 6(3)ன் கீழ் மாற்றம் செய்யப்படவில்லையென்பது தெளிவாகிறது.

4. எனவே, பொதுத் தகவல் அலுவலர் / மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்), மனுதாரர் கோரிய ஆக்கிரமிப்பு அகற்றுவது குறித்த மனுதாரரின் மனுவின் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விவரங்களை குன்றத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்திலிருந்து கோரிப்பெற்று 31.08.2026 தேதிக்குள் மனுதாரருக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்புமாறு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது. மேலும் குன்றத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலர் மனுதாரரின் ஆக்கிரமிப்பு குறித்த மனுவின் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், அதுகுறித்த விவரத்தினை மனுதாரருக்கு வழங்குமாறும் ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது. மனுதாரரின் மனுவிற்கு பொதுத் தகவல் அலுவலர் / துணை வட்டார வளர்ச்சி அலுவலர், குன்றத்தூர் என்பவரால் எந்தவித தகவல்களும் வழங்கப்படவில்லையென்பது தெளிவாகிறது. **எனவே, தகவல் அறியும் உரிமைச்சட்டத்தில் குறிப்பிட்டுள்ள காலக்கெடுவிற்குள் தகவல்களை வழங்குவது தொடர்பாக, அச்சட்டத்தின் விதிகளை பொதுத் தகவல் அலுவலர் தவறாமல் பின்பற்றவேண்டும் என்றும், தவறினால் சட்டத்தின் படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையத்தால் அறிவுறுத்தப்படுகிறது.**

**5. மனுதாரரின் 23.02.2024 தேதியிட்ட ஆக்கிரமிப்பு அகற்றம் குறித்த மனுவின் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விவரத்தினை குன்றத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்திலிருந்து கோரிப்பெற்று, பொதுத் தகவல்**

**அலுவலர் / மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) காஞ்சிபுரம் என்பவர் 31.08.2026 தேதிக்குள் மனுதாரருக்கு வழங்குமாறும் அதன் விவரத்தினை ஆணையத்திற்கும் அனுப்புமாறு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 11132/SCIC/2024</u>**

**பெறுநர்**
**பொது அதிகார அமைப்பு**
பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக
உதவியாளர் (நிலம்),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
காஞ்சிபுரம் 631 501

வட்டார வளர்ச்சி அலுவலர்,
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

பொதுத் தகவல் அலுவலர்/
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

**மனுதாரர்**
திரு K. தர்மலிங்கம்,
த/பெ குப்புசாமி,
எண்.1/55A, எம்.ஜி.ஆர் தெரு,
இரண்டாம் கட்டளை கிராமம்,
கோவூர் அஞ்சல், குன்றத்தூர் வட்டம்,
சென்னை 600 128